ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2224/26 - 2021 අප්‍රේල් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.04.22

*2224/26 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (x)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்,* PB *4833 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2020, பெப்புருவரி 27 ஆந் திகதிய 2164/54 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, அதன் நிரல்* I *இலும், நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகளில் வியாபார முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை* II *இன் முறையே நிரல்* I *இன் கீழும் நிரல்* II *இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, உயிரிமருத்துவ விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி (SLQF 6) மற்றும் பொதுச் சுகாதாரத்திலும் போஷணையிலும் கௌரவ விஞ்ஞான இளமாணி (SLQF 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் அத்துடன் கமத்தொழில் விஞ்ஞானம் என்பவற்றில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) என்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அல்லது அதற்குச் சமமான தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களின் சுருக்கீடு |
|---|---|
| உயிரிமருத்துவ விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ கௌரவ (உயிரிமருத்துவ விஞ்ஞானம்) |
| பொதுச் சுகாதாரத்தில் மற்றும் போஷணையில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ கௌரவ (பொதுச் சுகாதாரம் மற்றும் போஷணை) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2021, ஏப்பிறல் 09.

05-28

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.